# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X




காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்


*Vol:7 Issue :25 January 2025*

கோட்டை:7 வாயில்:25 ஜனவரி 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr.Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**அகப்பொருள் மரபுகளின் பொருண்மைகள்**
**தெ.மதுபாலா**

**தற்காலப் பயன்பாட்டில்  தன்மை வினைமுற்றுச் சொற்கள்**
**கோ. கோகிலா**

**தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் சிறந்த ஆசிரியர்கள்**
**முனைவர்.வி.சேகர்**

**ஐங்குறுநூற்றில் மருத நில வாழ்வியல் கோட்பாடு**
**கோ. கோகிலா**

**ஐங்குறுநூற்று மருதத்திணையில் ”வேட்கைப் பத்து” வெளிப்படுத்தும் செய்திகள்**
**த.கல்பனா**

**சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியின் உளவியல் கூறுகள்**
**கு.கலையரசி**

**ஆற்றுப்படை இலக்கியத்தில் ஐந்திணைசார் உணவுகள்**
**மு.கௌசல்யா**

**சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்**
**முனைவர் வெ. நளினி**

**பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்**
**வீ. மஞ்சு**

**குறுநில மன்னா ˙களின் பொருளாதாரநிலை**
**மு. சதீஸ்குமார்**

**கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்**
**மு.கனகவள்ளி**

**காப்பியங்களில் மரபுக்கருவிகள்**
**வீ.விஜயலட்சுமி**


**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்


**இஸ்லாமிய சூஃபித்துவமும் சடங்கு முறைகளும்**
முனைவர் சா.இன்குலாப்

**தேவிபாரதியின் "உயிர்தெழுதலின் சாபம்" சிறுகதையில் பெண்மன நிலைபாடு**
S.Priyadharshini

**விமணியின் குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை**
முனைவர் கு.புஷ்பாவதி

**அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.**
திரு.கு.ரவிச்சந்திரன்

**பாரதிதாசனின் பெண்ணுலகம்**
கா. கவிதா

**பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்**
நா.ரஹமத் நிஷா

**“தோட்டியின் மகன்” நாவல் காட்டும் துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை**
மு. வசந்தி

**நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்**
முனைவர் ப.விமலா அண்ணாதுரை

**கே.ஆர்.மீராவின் புதினங்களில் வெளிப்படும் பெண்மொழி**
நா.சௌந்தர்யா

**Creating Virtual Platforms to Showcase Undergraduates' Artworks**
1.Yasanthini, G.F



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**Lakśana and Lakśya in Music**
**Srivaramangai Sadagopan**

**சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்**
**ச. காயத்ரி தேவி**

**Importance of Sāhityam and the Influence of the Great composers in the musical compositions**
**Ms. Janaki Sadagopan**

**தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம் பாகவதமேளா ஓர் ஆய்வுநோக்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

**தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து**
**கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்**

**திருமந்திரத்தில் காணப்படும் உடல்சார் கருத்துகள் நவீன அறிவியல் பார்வை**
**பேராசிரியர் முனைவர் சு.ஹரிபிரசாத்**



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்

முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழர்களின் ஆதி வரலாற்றை அறியவும் மீட்டுருவாக்கம் செய்யவும் நமக்கு இலக்கியங்கள், கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், தொல்லியல் தரவுகள், வரலாற்று நூல்கள், நாணயங்கள், செப்பேடுகள், அயல்நாட்டார் பயணக்குறிப்புகள் ஆகியவைத் துணைபுரிகின்றன. அக்குறிப்புகளின் வழி நமக்குச் சங்ககால மக்களின் வாழ்வியலைப் புரிந்துகொள்ள முடிகின்றது. சங்க இலக்கியங்களில் முந்நூற்றுக்கும் மேற்பட்ட மன்னர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பினும் அவர்களின் வரலாறு தொடர்ச்சியாக எழுதப்படவில்லை. வெவ்வேறு காலக்கட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மன்னர்கள் தொடர்ச்சியாக ஆண்டதாக எடுத்துக் கொள்ளவும் இயலாது. அதனால் தொடர்ச்சியாகத் தமிழகத்தை ஆண்ட மன்னர்களை வரிசைப்படுத்துவதில் சிரமமேற்படுகின்றது. நமது தமிழ் அறிஞர்கள் தமிழ் மன்னர்களின் விவரங்களைக் காலவரிசைப்படி ஒருவாறுத் தொகுத்து அளித்துள்ளனர். அதன் அடிப்படையில் மன்னர்களின் வரலாற்றை நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. ஆயினும், இக்கட்டுரை குறிப்பிட்ட அரசனைப் பற்றி குறிப்பிடாமல் அரசன் என்ற பொதுப்பொருண்மையில் ஆராயப்படுகின்றது.*

**திறவுச் சொற்கள்:**

*அரசன், தமிழ் இலக்கியம், தமிழ்வரலாறு, கல்வெட்டுகள், சங்ககாலம்*

## *Abstract:*

*Literature, inscriptions, manuscripts, archaeological data, historical books, coins, copperplates, and foreign travelogues help us to know and reconstruct the early history of the Tamils. Through these references, we can understand the life of the people of the Sangam period. Although the names of more than three hundred kings are mentioned in the Sangam literature, their history is not written continuously. It is not possible to take the kings mentioned in different periods as ruling continuously. Therefore, it is difficult to arrange the kings who ruled Tamil Nadu continuously. Our Tamil scholars have compiled the details of the Tamil kings in a chronological order. Based on that, we can know the history of the kings. However, this article examines the general concept of a king rather than the name of a specific king.*

## *Key words:*

*King, tamil history, tamil Literature, Inscriptions, Sangam period*

**முன்னுரை:**

உலகிலுள்ள எந்த நாடாக இருந்தாலும் அந்நாட்டைக் காக்கும் தலைவனின் பங்குதான் அந்நாட்டின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் காரணமாக அமைகின்றது. அத்தகைய தலைவனே வரலாற்றை உருவாக்குகின்றான். அத்தகுத் தலைவனே அரசன் என்று மக்களால்

அன்புடனும் மரியாதையுடனும் அழைக்கப்படுகின்றான். பண்டைக்காலத்தில் வடவேங்கடத்திற்கும் தென்குமரிக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியை ஆட்சி செய்தவர்கள் மூவேந்தர்களான சேர. சோழ, பாண்டியர். இவர்களின் ஆட்சியின்கீழ் குறுநில மன்னர்கள், இனக்குழு தலைவர்கள் எனப் பல்வேறு ஆளுமைகளும் ஆட்சி செய்து வந்தனர். அவர்களில் சேர,சோழ,பாண்டியர்கள் மட்டுமின்றி குறுநில அரசர்கள் குறித்து இலக்கியங்கள் மட்டுமல்லாமல் பல்வேறு சான்றுகள் வழி அறியமுடிகின்றது. அரசர்கள் ,குறுநில அரசர்கள், இனக்குழு தலைவர்கள் ஆகியோர் எத்தகைய வாழ்க்கை நடத்தினர் என்பதைக் காண்போம்.

**அரசன்**

தமிழக எல்லைப்பரப்பை ஆண்ட பெருந்தலைவன் அரசன் என அறியப்படுகிறான். அவன் அரசன் என்றும் மன்னன் என்றும், பெரியதேவர் என்றும், பெரிய பெருமாள் என்றும், உலகுடைய பெருமாள் என்றும் அழைக்கப்படுகிறான். அந்தந்தக் காலத்தில் அரசு புரியும் மன்னன் 'அன்றாள்கோ' என்று அழைக்கப்படுவான். ஓர் அரசனின் முக்கிய கடமை நாட்டு மக்களின் பாதுகாப்பே. இதனை, 'அம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்(புறம்:9) என்ற வரிகளால் அறியலாம். இதனால் போர்க்காலங்களில் மக்களுக்கு அறிவிப்பு வழங்கி பாதுகாப்பான இடத்திற்கு மக்களை அனுப்பி வைப்பது அரசனின் தலையாய்ப் பொறுப்பாக இருந்தது என்பதை அறிய முடிகின்றது. அதேபோல் வீரத்துடனும் எந்த சூழ்நிலையிலும் தன்நிலை தாழாது மானமே பெரிது என்று வாழ்வதே அரசனின் சிறந்த பண்பாக இருந்தது. தம் நாட்டு மக்களின்மீது மிகுந்த அன்பும் பரிவும் கொண்டு இறைவனுக்கு நிகராக ஆட்சி செய்தவனே சிறந்த அரசனாகப் போற்றப்பட்டான். மக்களும் அரசனை இறைவனாகத்தான் பாவித்தனர்.இலக்கியங்களும் காக்கும் கடவுளான திருமாலுக்கு நிகராக அரசனைப் போற்றியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

நால்வகைப்படையும் தனக்கென ஒரு கொடியும் வெண்கொற்றக்குடையும் முரசும் குதிரையும் யானையும் தேரும் தமக்கென ஒரு மாலையும் தலையணியும் முடியும் செங்கோலும் அரசர்க்கு உரியன. முற்காலத்தில் போர் தொடங்க விரும்பிய அரசன் முதற்கண் தான் போர் மேற்கொள்ளும் மாற்றரசனிடம் நும் நாட்டின்மீது படையெடுப்போம். நும் நாட்டில் உள்ள பசுக்களும் பார்ப்பணரும் பெண்டிரும் நோயுடையோரும் பிள்ளை பெறாதவரும் எமது அம்புகளுக்கு இலக்காகமல் தப்பித்துக் கொள்ளுங்கள் என்று (புறம் 289) கூறிவிடுவர்.தன் நாட்டு மக்களின் நலன் மட்டுமில்லாமல் எதிரி நாட்டு மக்கள் மீதும் கருணைக்கொண்டவனாகத்தான் இலக்கியங்கள் நமக்கு அரசனை அறிமுகப்படுத்துகின்றன.

**அரசனின் பாதுகாப்பும் பணியாளர்களும்:**

அரசனின் பாதுகாப்பு மிகவும் அவசியமான ஒன்று . அதனால் அரசனைச்சுற்றி எப்போதும் பலத்த பாதுகாப்பு இருக்கும். அரசனுக்கு மெய்க்காவலனாக விளங்குபவன் 'அங்க ரக்ஷகன்' என்று அழைக்கப்பட்டான். அரசனுக்கு உடனுக்குடன் செய்திகளை அறிவிக்கும் அணுக்க அதிகாரிக்கு 'அவசரம்' என்று பெயர். மன்னரைக் காலை நேரம் தவிரப் பிற நேரங்களில் புகழ்ந்து பாடுபவர் 'ஏத்தாளர்' எனப்பட்டனர். அரண்மனையில் காலையில் மன்னனைத் துயிலெழுப்ப ஒலிக்கும் முரசு காலை முரசும் என்பதாகும். பள்ளி எழுச்சி முரசும், கிணைப்பறை, மருதப்பறை, கூத்தர் பறை, நாள் முரசு ஆகியவை இசைக்கப்பட்டன என்று சிலப்பதிகாரம் பதிவு செய்கின்றது.

காலை முரசக் கனைகுரல் ஓதியும் (சிலப் 13:140)

காலை முரசக்கனைகுரல் இயம்புமாகிலின் (சிலப்:17:6)

*காலை முரசும் பள்ளி எழுச்சி முரசு (மேலது அரும்)*

*கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும் (சிலப் 13:148)*

*கிணை - மருதப்பறை - கூத்தர் பறையுமாம் (மேலது.அடியார்க்)*

*நாள்முரசு இரங்குமிடனுடை வரைப்பில் (புறம்:161:29)*

*படுகண் முரசும் காலை இயம்ப(மதுரைக் 232)*

*தழங்குரல் முரசும் காலை இயம்ப (ஐங் 448:1)*

அரசர்களுக்குரிய மூன்றுவகை முரசுகளுள் ஒன்று மங்கல முரசு. அரண்மனைகளில் பெருங்கொடையளித்ததைக் குறிப்பிட்டுக் காட்ட முழங்கப்பட்டது. இடிபோலும் தியாக முரசு முழங்க பூண்களை (ஆபரணங்களை) வரையாமல் (அளவில்லாமல்) கொடுத்து முழக்கப்படுவது *(சீவக 2599 உரை)*

இயவர் என்ற தோற்கருவியாளர் முரசு அறைந்து முரசிற்குப் பலியிடவும் மன்னர் அருகில் சென்று பாடிடவும் உரிமை பெற்றவர்.

*கலித்த இயவர் இயம் தொட்டன்ன (மதுரை:304)*

*இயவரும் அறியாப் பல்லியம் கறங்க (புறம்336:6)*

தேர், யானை, குதிரை, காலாட்படைகள் சூழ்ந்துவர ,வள்ளுவ மூதறிஞர், யானைமீது அமர்ந்து அகநகர் மாந்தர்க்கு மட்டும் முரசறைந்து சிறப்புச் செய்தியை அறிவிப்பார். இவர் அரசனது முடிசூட்டு நாள், திருமண நாள், பிறப்பு நாள் முதலிய சிறப்பு நாள்களுக்குரிய செய்திகளை மட்டும் பறையறைந்து அறிவிப்பவர். அரசுடைமை பட்டம் கட்டப்பெறும் நாளில் புதிய அரசனுக்கு இடப்பெறும் சிறப்புப்பெயர் 'அபிஷேக நாமம்' என்று அழைக்கப்படும்.

அரசியருள் முதல் மரியாதைக்குரியவள் பட்டத்தரசி இவள் அக்ரமகாதேவி என்று அழைக்கப்பட்டாள். "உடையார் உத்தமசோழர் அக்ரமஹா தேவியர் ஒறட்டணன் சோரப்பையார் "(தெ.கல்.தொ.19.கல்141) தமக்கையாரைக் குறிக்கும் முறைப்பெயர் அக்கன் என்பதாகும். முதல் இராசராசன் தன் தமக்கையாரை குந்தவை பிராட்டியாரை அக்கன் எனக் குறித்துள்ளான் என்று அறிகிறோம்.

" பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜீச்வரமுடையார்க்கு நாங்குடுத்தனவும் அக்கன் குடுத்தனவும்" (தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டு தெ.கல்.தொ.2கல் 4)

அரசவையில் அரசர்க்கு அருகிலிருந்து முறையாக வெற்றிலை மடித்தளிக்கும் அதிகாரிக்கு அடைப்பம் அல்லது அடைப்பக்காரன் என்று பெயர்.(தாம்பூலப் பெட்டி)அடைப்பு முதலிகள் என்றும் அழைப்பர். அரசர் முதலியோரிடம் நெருங்கிப் பழகும் அந்தரங்க ஊழியர்க்கு 'அணுக்கர்' என்று பெயர். இவர்களில் பெண்பாலரும் உண்டு. 'அணுக்கியர்' என்று அழைக்கப்படுவர். அரசனுடைய செயல்களை உடனிருந்து ஆராய்ந்து கூறும் அதிகாரி பெருமக்கள் அக்காலத்தில் இருந்தனர். இவர்கள் அரசகரும 'அணுக்கத்தினர்' என்றும் 'அரசகருமமாராய்வார்' என்றும் அழைக்கப்பட்டனர். சோழமன்னர் ஆட்சியில் அரசமா தேவியர்க்கு அணுக்கத்தொண்டு செய்வாரை மேற்பார்வை செய்தற்குப் பெண் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் 'அதிகாரிச்சி' என்று அழைக்கப்பட்டனர்.

’ அதிகாரிச்சி சோமயன் அமிர்தவல்லியும்’ (இராசாதிராசன் 1.கி பி 1056,தெ.கல்.தொ.5. கல். 520)

” ஸ்ரீ ராஜேந்திரசோழ தேவர் அணுக்கியர் ஐய்யாறந் செம்பொந் தங்கை கூத்தந் உத்தமசீலியார் ” (தெ.க.தொ.5 கல்.644)

” உடையார் ஸ்ரீராஜேந்திரசோழ தேவர் அணுக்கிநக்கன் பாவை” (தெ.க.தொ.4 கல்.223)

இறைவன் திருமேனிக்குத் திருமஞ்சனம் ஆட்டும் மண்டபமும் அரசன் குளிக்கும் இடமும் அபிஷேக மண்டபம் என்று அழைக்கப்படும். செல்வர்கள் அரசியல் தலைவர்கள் ஆகியோர் இல்லங்களில் நிலையாக இருந்து ஏவின செய்யும் மகளிருக்கு அடியாள் என்று பெயர். அரசனுக்கு அருகிருந்து பணிபுரியும் மகளிருக்கு அணுக்கியர் என்று பெயர்.

‘நம் கரும மாராயும் ஆரூரன் அரவணையானான பராக்கிரம சோழ மூவேந்த வேளான்’ (முதல் இராசராசன் ,பெரிய லய்டன் செப்பேடுகள்)

அரச மரபில் தோன்றியவனாகவோ அல்லது அரசியலில் பெருந்தலைவனாகவோ ஊராட்சியில் மதிக்கப் பட்டவனாகவோ உள்ளவனுக்கு அரையன் என்று பெயர்.

அரையன் மகிமாலயனான பிராந்திக முத்தரையன்:

’ தான தொங்கன் தெரிந்த கைக்கோளரில் அரையன் கேயவிடங்கனேன்’

’ பொய்கை நாட்டு பெரும்புலியூர் மணக்குடி அரையன்’ (தெ.க.தொ.19.கல்.15,61,144)

அரசன் அறம் பற்றிச் செய்யும் நிவந்த ஆணையை அப்படியே நிறைவேற்றும் அதிகாரத்திற்கு ‘ஆணத்தி’ அல்லது ‘ஆஜ்ஞப்தி’ என்று பெயர்.

’ விக்கிரமாதித்த வாணராயன் விண்ணப்பத்தாலும் காடுவெட்டி தமிழ் பேரரையன் ஆணத்தியாலும் ஏககிராமாக்கி’ (தெ.கல்.தொ.3கல்.43)

அரசனின் கட்டளை அல்லது சபையார் தீர்மானம் செய்த முடிபு ஆதேசம் என்று பெயர்.

” ஸ்ரீராஜேந்திரசோழ தேவர் அணுக்கியர் ஐய்யாறந் செம்பொந்

தங்கை கூத்தந் உத்தமசீலியார் ” (தெ.கல்.தொ.5 கல்64)

” உடையார் ஸ்ரீராஜேந்திரசோழ தேவர் அணுக்கிநக்கன் பாவை” (தெ.கல்.தொ.4 கல்2.23)

பகைவரைக் கொல்லும் காலாட்படையை முன்னே செலுத்துதலுக்கு அடுதூசிமுன்விட்டு என்று பெயர். (தூசி- காலாட்படை)(வீரராசேந்திரன் மெய்க்கீர்த்தி)

**அரண்மனை:**

அரசியாருள் முதல் மரியாதைக்குரியவள் அக்ரமகாதேவி பட்டத்தரசி. “உடையார் உத்தமசோழர் அக்ரமஹா தேவியார் ஒறட்டணன் சோரப்பையார்” (தெ.கல்.தொ 19,கல்.141 ). அரண்மனையில் பணி செய்யும் அதிகாரிகளுள்ளிட்ட குழுவினர் ‘அந்தரங்கப் பணியாளர்கள்’ . எனப்பட்டனர். “நம்பிராட்டியார் நேரியன் மாதேவியார் அப்பரிவாரத்துக் கைக்கோளன் சோறுடையான்” (தெ.கல்.தொ 5,கல்.700 ). அந்தப்புற நிர்வாகப் பணியாளர் அதிகாரிக்கு அகம்படி உடையான் என்று பெயர். அரசன் வாழ் அரண்மனையிலும் அமைச்சர், சேனைத்

தலைவர் போன்ற பெருமக்கள் வாழ் இல்லத்திலும், அவ்வவர்க்கு அணுக்கப் பணி செய்வாருள் முதன்மையானவர். இவர்களை 'அகம்படித் தன முதலிகள்' என்பர். "அரசூருடையான் செங்கனிவாயன் சோழ கோனார் அகம் படித்தன முதலிகளில்" (தெ.கல்.தொ 12,பகு 1,கல்.118 ) படைவீரர்களாய் அரண்மனையிலிருந்து அரச ஊழியம் செய்வாருள் முதன்மையானவர்கள் அகம்படி மறமுத்லிகள் அல்லது அகம்படி சேனை முதலிகள் என்று பெயர் பெறுவர்.

" பல்லவந் கோபெருஞ்சிங்கந் அகம்படி முதலிகளில் எதிரிகணாயகந் பொத்தப்பிச் சோழன் "( (தெ.கல்.தொ.7..கல்149)

" குலோத்துங்க சோழக் கடம்பராயந் அகம்ப்டி மற முதலிகளில்

நாற்றன் பெரியானான வீரம் அழகிய பல்லவரையன்" (புதுக்.கல்.181)

அந்தப்புறத்திற்கான பணியாளர் அகம்படிமைத் தொழில் புரிவோர் அகம்படிமை எனப்பட்டனர். அரண்மனை மேல்நிலைப் பணியாளர் அகம்படியார் என்று அழைக்கப்படுவார்.

அரண்மனையில் பணிசெய்யும் அதிகாரிகளுள்ளிட்ட குழுவினர் அந்தரங்கப் பணியாளர்கள் அகப்பரிவாரம் எனப்பட்டனர்.

" நம்பிராட்டியார் நேரியன் மாதேவியார் அகப்பரிவாரத்து

கைக்கோளன் சோறுடையான்" (தெ.கல்.தொ.5,கல்700)

அரண்மனையின் சிறந்த பகுதி, அரண்மனை நிர்வாக உள்துறை அகம்படி அல்லது அந்தப்புறம், என்று அழைக்கப்பட்டது. அந்தப்புற நிர்வாக பணியாளர் அதிகாரி 'அகம்படி உடையான் அல்லது 'அகம்படி மறமுதலிகள்' என்று அழைக்கப்பட்டனர்.

கோட்டைக்குள் அமைந்த சுற்றிடம் உள்ளாலை என்று அழைக்கப்பட்டது.

'தஞ்சாவூர் உள்ளாலைப் பாண்டி வேளத்து இருக்கும் இடையன் பனையூர் காரியும்' (தஞ்சைப்பெரியகோயில் கல்வெட்டு) இராக்கடை வேசையர் என்பது காவற்கணிகையர் ஆவர். இவர்கள் இரவு நேரங்களில் பணிபுரியும் பெண் காவலாளிகள். இத்தகைய அரண்மனைக் காவற் பெண்டிரை இராக் கிடைப் பெண்டுகள் என்று அழைப்பர்.

காவற்கணிகையர் ஆடற்கூத்தியர் (சிலப்:5:50)

காவற்கணிகையர் —இராக்கடை வேசையர் (அரும்.)

காவற்கணிகையர் —களத்தாடும் கூத்திகள் (அடியார்க்)

களத்தாடும் கூத்திகள் என்பவர் அரண்மனையில் காவல் பணியையும் மேற்கொண்ட கணிகையர்.

காவற்கணிகையர் ஆடல் கூத்தியர் (சிலப்:5:50)

காவற்கணிகையர் - களத்தாடும் கூத்திகள் (மேலது.அடியார்க்)

இராக்கடைப் பெண்டுகள் என்பாரும் உளர்.

போருக்கான காரணங்கள்:

நாடு பிடிக்கும் ஆசையும், கப்பம் கட்டத்தவறிய சிற்றரசர்கள் மீது தந்தை வெற்றி கொண்ட நாட்டின் அரசுரிமையைத் தன் ஆட்சியிலும் நிலைநிறுத்திக் கொள்ளவும், பேரரசு

வலிமையின்றிக் காணப்படும் நேரத்திலும் போர் நிகழும். ஆட்சியிலிருக்கும் அரசன் போரில் இறந்துபட்டால் அக்களத்திலேயே அவ்வரசனின் இளவலோ மகனோ முடிசூட்டுவர் போரைத் தொடர்வர். அதேபோல் , வீரத்தினையும் புகழையும் நிலைநாட்டவும் ,பழித்துரைக்கும்போதும்,, தூதுவர்களையும் ஒற்றர்களையும் அவமானப்படுத்தும்போதும், தனக்கு எதிராகப் போர்தொடுத்த மன்னர்களையும் அவர்களுக்குத் துணை நின்ற மற்ற அரசர்களை வெல்லவும் போர் நிகழ வாய்ப்பிருக்கின்றது. அது தவிர பெண்வேண்டியும் போர் நிகழும்.

சோழர் வரலாற்றை எடுத்துக் கொண்டால் அவர்களிடம் மேலைச் சாளுக்கியர் மட்டும் ஐந்து முறைப் போர் தொடுத்துள்ளனர். ஆனால் ஐந்து முறையும் தோற்றனர். இறுதியில் சோழனிடம் மண்டியிட்டு தனது தோல்வியை ஒப்புக் கொண்டதும் அவர்களது நாட்டை அவர்களுக்கே திருப்பி கொடுத்துவிட்டதாக வரலாற்றுச் செய்தியால் அறியலாம். இதனை வீர ராஜேந்திரன் மெய்க்கீர்த்தி சொல்கின்றது.

**யானைப்படை:**

மூவேந்தரிடமும் யானைப்படை இருந்தது . சோழவேந்தனிடம் அறுபதினாயிரம் யானை இருந்ததாகச் சீன வழிப்போக்கன் பதிவு செய்திருப்பதிலிருந்து அறியமுடிகிறது. அரசன் போர்கள் இல்லாதபோதும் யானைகளின் அணிவகுப்பைக் கண்டு மகிழ்வான். யானைப் படைப் பிரிவிற்கு அத்திகோசம் என்று பெயர். கல்வெட்டுகளில் அத்தி கோஷத்தார் என்று பெயர் பெறும். யானையின் கழுத்தில் கட்டப்படும் பெரிய மணிக்கு கண்டாமணி என்று பெயர். கண்டை என்றும் கூறுவர். யானை மீதிருந்து அறிவிப்புகள் செய்வது, அரசன் போருக்குச் செல்வது ,அரசன் வாகைசூடி நகர்வலம் வருவது, யானை அணிவகுப்பு செய்வது, போர் இல்லாத போது மற்ற பணிகள் செய்வது என யானைகளின் பங்களிப்புகள் அதிகம். ஒவ்வொரு மன்னரும் யானைப்படை வைத்திருப்பதை தமது நாட்டின் பெருமையெனக் கருதினர். யாழ் மீட்டி வரும் பாணர்களுக்கும் புகழ்பாடும் புலவர்களுக்கும் யானைகளைப் பரிசளித்து மகிழ்ந்தனர். யானைக் கொடை கொடுப்பதில் சிறந்தவனாக ஆய் அண்டிரன் என்னும் மன்னன் புகழப்பட்டான். . அவனது காட்டை புலவர் யானைக்காடு என்று புகழ்ந்து பாடுகின்றார். தைமூர் என்னும் மன்னன் நமது யானைப்படையைக் கண்டு இத்தனை பெரிய உடம்பைத் தூக்கிக் கொண்டு இவ்வளவு வேகமாகக்கூட முன்னேறுமா என்று வியந்ததாக வரலாற்றுச் செய்தி உள்ளது.

சங்ககாலத் தமிழகக் காடுகளில் வாழ்ந்த காட்டுயானைகளைப் பிடித்துவந்து பழக்கிப் பயன்கொண்ட செய்திகளைச் சங்க இலக்கியம் கூறும்போது காட்டுக்குதிரைகளை அவ்வாறு பிடித்துவந்த செய்திகள் எவையும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சங்க இலக்கியம் கூறும் செய்திகள் அனைத்தும் நாட்டு வளர்ப்புக் குதிரைகளைப் பற்றியதாகவே இருப்பதால், குதிரைகளின் தாயகம் தமிழகம் அல்ல என்று எண்ணத் தோன்றுகிறது. அரேபியர்களிடமிருந்தே குதிரைகளைப் பெற்று நாம் பயன்படுத்தினோம் என்பதில் ஐயமில்லை.

**வெற்றிக்கொண்ட செல்வம்:**

மதுரை மன்னன் போரில் வெற்றிபெற்ற பின்னர் பகைவரின் நாட்டிலிருந்து அவர்களது செல்வங்களையும் குதிரைகளையும் கப்பலில் கொண்டுவந்த செய்தியை மதுரைக்காஞ்சியின் கீழ்க்காணும் வரிகள் கூறுகின்றன.

விழுமிய நாவாய்ப் பெருநீர் ஓச்சுநர்

நனம்தலை தேஎத்து நன்கலன் உய்ம்மார்

புணர்ந்து உடன் கொணர்ந்த புரவியொடு அனைத்தும்

வைகல்தோறும் வழிவழி சிறப்ப - மதுரை. 323

மதுரைக்காஞ்சி கூறுவதைப் போலவே, குதிரைகள் கடல்வழியாகத் தமிழகம் வந்ததைக் கீழ்க்காணும் பட்டினப்பாலை வரிகளும் உறுதிசெய்கின்றன.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் என்று இப்பாடலில் வரும் நிமிர்பரிப் புரவி என்பது உயரமான குதிரை வகையினைக் குறிப்பதாகும்.

மேற்காணும் இரண்டு கருத்துக்களையும் இணைத்துப்பார்த்தால், குதிரைகள் கடல்வழியாகத் தான் தமிழகம் வந்தன என்பதையும் குதிரைகளின் தாயகம் தமிழகம் அல்ல என்பதையும் உறுதியாகப் புரிந்துகொள்ளலாம்.

பால்போல வெண்ணிறம் கொண்ட குதிரைகள் நான்கினை ஒன்றாக ஒரு வண்டியில் பூட்டிய செய்தியினை மேற்கண்டப்பாடல் வரிகள் கூறுகின்றன. குதிரைகளை தேரில் பூட்டிச் செல்லும்போது நான்கு குதிரைகளை ஒன்றாகப் பூட்டிச் செல்வது அக்காலத்து மரபு போலும். தன்னை நாடி வந்த இரவலர்க்குப் பரிசில் வழங்கியபோதுகூட நான்கு குதிரைகள் பூட்டிய தேரினை வழங்கியதாகச் செய்திகள் காணப்படுகின்றன. சில சான்றுகள் வழி அறியலாம்..

பால்புரை புரவி நால்கு உடன் பூட்டி - பொரு.165

நன்னால்கு பூண்ட கடும் பரி நெடும் தேர் - அகம்.104

புரவி துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி அரிதேர் நல்கியும் - பெரும். 488

நந்நான்கு வீங்கு சுவல் மொசிய தாங்கு நுகம் தழீஇ - அகம். 400

**போர்க்களம்:**

பகைவர் நாட்டில் தீயிட்டு கொளுத்துதல் போரில் தோற்ற மன்னனின் முரசு, குடை ஆகியவற்றைக் கைக்கொள்ளுதல் களவேள்வி செய்தல் முதலியன போர் மரபாகும். அதேசமயம் தோல்வியுற்றவனின் நாட்டை இழிவுபடுத்துவதற்காக அவனது கோட்டை கொத்தளங்கள் போர்த் தடயங்களையெல்லாம் இல்லாததாக்கி கழுதைகளைக் கொண்டு அந்நிலங்களை உழுது, வேண்டாத பயிர்களுக்கு விதை தூவிச் செல்வர். இவ்விதமான செயல்பாடுகள் யாவும் பகை மன்னன் மீது கொண்டுள்ள வெறுப்புணர்வைத் தணித்துக் கொள்ள உதவியாக அமைந்திருக்கின்றன.(புறம்15,392)

பகை மன்னர்களை அகப்படுத்தி கடிமரத்தை வெட்டுவித்து ஊரை எரித்து நீர் நிலைகளை உடைத்து வயல்களில் எரியூட்டி பகைவர் நாட்டை பாழாக்கும் செயல்களைக் காலங்காலமாகச் செய்து வந்துள்ளனர். அத்துடன் பகை நாட்டரசர்களின் கலங்களைப் பரிசிலர்க்கு ஈந்தும் மாற்றரசர்களின் பொன்முடியால் கழல் செய்து தாம் அணிந்தும் அவர்களுடைய யானையின் ஓட்டைப் பொன் கொண்டு பொற்றாமரைப்பூ செய்தும் பாணர்களுக்கு உதவியும் செய்துள்ளனர். ஆனால் பழந்தமிழர்கள் போர் மேற்கொள்ளும்போது நேரடியாகத் தாக்கும் எண்ணம் கொண்டவர்களே தவிர, வஞ்சகமாகத் தாக்கி வெல்லுதல் என்ற எண்ணம் கொண்டவர்கள் அல்ல என்று ந கந்தசாமி குறிப்பிடுவார்.

போருக்குச் செல்லும்போது பெண்களை அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை. பிற்காலத்தில் விஜய நகர வேந்தர் முதலியோர் செய்ததுபோல பெண்களையும் உடனழைத்து செல்லும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது. பாணர்களும் பொருநர்களும் விறலிகளும் எந்தப் போரிடையேயும் போகலாம். அவர்களை ஒருவரும் துன்புறுத்தமாட்டார்கள். படைவீரர்களுக்கு ஊக்கமளிக்கும் அரசவை புலவர்களையும் போர்க்களத்திற்கு அழைத்துப் போவதுண்டு.

வெண்ணிக்குயத்தியார் என்னும் பெண்பாற் புலவர் சோழன் படையுடன் போர்க்களத்தில் இருந்தார்.(புறம்:66)

**போர்க்கள நடனங்கள்:**

மன்னனோ படைத் தலைவனோ இறந்துபோனால், உடன் தானே போரை நிறுத்திவிட்டு உடலைச் சுற்றி நின்று குரவைக் கூத்தாடுதல் அன்றைய வழக்கம். வீரர்களும் விறலிகளும் இதில் கலந்துகொண்டார்கள். (பொருள்:76,புறம்:22,396) குரவை நிலை என்பது புறத்துறையுள் ஒன்று . மகளிர் கைபிணைந்து ஆடுதல். மகளிர் போர் வீரர்களோடு சேர்ந்து தலைவனின் வெற்றியைக் கொண்டாடும் ஆடல் என்று அகராதி விளக்கம் அளிக்கிறது.(பதிற்:52)

தொண்ட கப்பறை கொட்டி ஆண்களும் பெண்களும் சேர்ந்து குரவைக் கூத்தாடி முருகனை வழிபடுவார்கள். போர்க்களத்தின் இசைக் கருவிகள் வேறானவை. போர்க்களத்தில் துணங்கைக் கூத்தாடுவதில் திறமை மிக்கவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். போர்க்களத்தில் போர் முரசும் முழங்குகலையில் மன்னர்க்குரிய அணிகலன்களை அணிந்து பொன்னுழஞ்ஞைப் பூவைத் தலையில் சூடி வாளைச் சுழற்றி ஆடவும் இவன் திறமையுடையவனாயிருந்தான். (பதிற்:6ஆம் பத்து) ஒள்வாளமாலை என்ற கூத்தினைப் பற்றிப் பரணர் புறம்:142) இல் குறிப்பிடுகின்றார். அதிகனைக் கொன்ற காசர்க் கோட்டுக்காரனாகிய மிஞிலி பாழிப் போர்க்களத்தில் அக்கூத்தை ஆடியதாக் கூறுகின்றார். அமலை என்று தொல்காப்பியர் கூறும் வாள் வீசி ஆடும் ஆட்டந்தான் இது(பொருள்:72)அதில் விறலிகளுக்கிடமில்லை. நீள்வாள் அமலை என்பது வெற்றி நடனம். வென்றிக்கூத்து என்றும் கூறுவர். வாள் அமலை — வாளை உயர்த்தி ஆடும் கூத்து. போர்க்களத்தில் வெற்றிக்குப் பின் வீரர் வாளை உயர்த்திச் சுழற்றி ஆடுதல் அரசன் வாளைச் சுழற்றுவதோடு வீரக்கழல் அணிந்த வீரர்களும் இணைந்து ஆடும் ஆடல்.

வலம் படு முரசும் துவைப்ப வாள் உயர்த்து (பதிற்.56:4)

வடிவாள் விதிரா வயவர் •••அயர்ந்த ஒள்வாள் அமலையும் (இலக்.வி .611)

களிற்றுஉடனிலையே ஒள்வாள் அமலை (புறப்:வெண்:7:9)

ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பின் (அகம்142:14)

புறத்திணையுள் ஒன்று

பட்ட வேந்தனை அட்ட வேந்தன்

வாளோர் ஆடும் அமலையும் (தொ.பொ.72)

**நூழிலாட்டு**

போரில் பகைவர் வேலால் எறியப்பட்ட வீரன்,தன்னிடம் அதற்கு மாறாக அவன்மேல் எறிய வேல் இல்லையென்று மயங்கான். தன் மார்பிற்றைத்த வேலையே பறித்து எறிவான். இச்செய்கையே, நூழிலாட்டு என்று அழைப்பர்.

” களங்கழுமிய படையிரிய

உளங்கழிந்தவேல் பறித்தோச்சின்று”

என்று புறப்பொருள் வெண்பா மாலையும்,

” கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்

மெய்வல் பறியா நகும்" என்று திருக்குறளிலும் கூறப்பட்டது.

**அட்டை ஆடல்**

தலை துண்டிக்கப்பட்டும் வீரரின் உடல் வீரச்செயல் காட்டி ஆடும் ஆடல்.

உடம்பு ஆடுதலின் அட்டை ஆடல் எனப்படும். இதனை (தொ.பொ.71 நச்சர்)பதிவு செய்துள்ளது.

**தோற்ற மன்னர்களின் நிலை:**

ஒரு மன்னன் மற்றொரு மன்னனிடம் போரில் தோல்வியுற்ற அரசனையும் அவன் மகனையும் அழைத்து அவர்கள் தலைமயிரை மொட்டை அடித்து மண்டையின் நடுவில் எண்ணெய் நிற்கக்கூடிய விதமாய் தலையின் மேல் வட்டமாகச் சாணியைப் பொருத்தி உச்சியில் நெய் வார்த்துத் திரியிட்டுத் தீப்பொருத்தி தன் அரண்மனை வாயிலின் இரு மருங்கிலும் தந்தையையும் தனையனையும் தனித்தனியே நிற்க வைத்து நடை விளக்காகச் செய்வார்கள். இதற்கு நடை விளக்கு என்று பெயர்.

பகையரசரைச் சிறைப்படுத்திக் கொணருங்கால், அவர்கள் கழுத்தில் இறுக்கிப் பிணைத்த சக்கரம் கையில் பிணித்த இருப்பு வளையச் சங்கிலி ஆகியவற்றைக் கழற்றி விடுவித்து என்பதற்கு ஆழியும் நிகளமும் கழற்றி என்பர்.(முதல் வீரராசேந்திரன் மெய்க்கீர்த்தி- தெ.கல்.தொ.3:1கல்30)

சிறைபிடிக்கப்பட்ட மகளிர் அமர்ந்து வாழும்படி தலைநகரில் சோழரால் தனியே அமைக்கப்பட்ட மாடமும் மாடப்புறமும் வேளம்' என்று வழங்கப்படும்.

**அரசனுக்குரிய சிற்றிலக்கிய வகைகள்:**

அரசரும் அரசரைப் போன்றவர்களும் சபையில் நீண்ட நேரம் இருக்கும்போது, மருத்துவர் மந்திரிமார் முதலியோர்க்குக் கண் துயில் கொள்வதைக் கருதிக் கூறுவது கண்படை நிலையாகும். வேந்தருடைய சின்னங்களைப் பற்றிய சிற்றிலக்கியம். ஆதலால் இது சின்னப்பூ எனப் பெயர் பெற்றது. இதே கருப்பொருளைக் கொண்டு பத்துப் பாடல்களில் பாடப்படும் சிற்றிலக்கியம் தசாங்கப்பத்து எனப்படும். ஓர் ஆண் மகனின்(வேந்தர்) சிறப்பியல்புகளைக் கூறி, அவனது வீரத்தையும் புகழையும் குடிப்பெருமையையும் கொடை வள்ளன்மையும் கல்வியறிவையும் செல்வத்தையும் குறித்துப் புகழ்ந்து பாடுவது. ஆண்மகனின் ஒழுங்கலாற்றைக் கூறுவது செவியறிவுறூஉ ஆகும். மன்னனுக்கு அயலுறுப்பாய் அமையும் பதினான்கை 14 ஆசிரிய விருத்தத்தால் போற்றி அவன் வெற்றி பெறவேண்டும் என வாழ்த்துவது தசாங்கத்தயல் எனப்படும்.

மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, யானைப்படை, குதிரைப்படை, கொடி, முரசு, செங்கோல் எனும் பத்தும் அரசுக்கு உரிய உறுப்புக்களாகும். இப் பத்து உறுப்புக்களையும் பத்து நேரிசை வெண்பாக்களால் பாடுவதே தசாங்கப்பத்து எனப்படும். அரசன் போருக்குச் செல்லும்போது முன்னே செல்லும் கொடிப்படையின் சிறப்பை எடுத்துக் கூறிப் பாடுவது தானைமாலைக்குரிய இலக்கணம் ஆகும். மன்னனை உறக்கத்திலிருந்து எழும்படி வேண்டுவதாகப் பாடப்படுவது துயிலெடை நிலை எனப்படும். தொல்காப்பியக் காலத்தில் மன்னனைக் குறித்துப் பாடப்படும் இது ஒரு துறையாக இருந்தது. பின்னர் பக்திக் காலத்தில் இறைவனைத் துயில் எழுப்புவதாகப் பாடும் வழக்கம் ஏற்பட்டதுடன், தனியான ஒரு சிற்றிலக்கியமாகவும் உருவானது. இக்காலத்தில் இச் சிற்றிலக்கியம் பள்ளியெழுச்சி என்றும் அழைக்கப்படுவது உண்டு.

**போர் குறித்தான இலக்கிய வகை:**

பகைவர் ஊருக்குப் புறத்தே சூழ்ந்திருக்க உழிஞைப்பூமாலை சூடிப் படைகொண்டு சுற்றி வளைப்பதைக் கூறுவது உழிஞை மாலையாகும். பகைவருடைய ஊர்ப் புறத்தில் காஞ்சிப் பூமாலை சூடி ஊன்றலைக் கூறுவது காஞ்சி மாலையாகும். தும்பைப் பூமாலையைச் சூடிக்கொண்டு பகைவரோடு போர் செய்வதைக் கூறுவது தும்பைமாலையாகும்.

போர்க்களத்தில் நிகழும் கொடூரங்களை ஆசிரியப் பாவினாலும், வஞ்சிப்பாவினாலும் கூறும்படி அமைந்ததே செருக்கள வஞ்சி ஆகும். இது அமர்க்கள வஞ்சி என்றும் அழைக்கப்படும். போரில் மாண்டார் உடலையும் குதிரைகள், யானைகள் முதலானவற்றின் உடலங்களிலிருந்து, தசையையும், இரத்தத்தையும், பேய், பிசாசுகளும், கழுகு, நாய், காகம் முதலான தின்று களித்தாடும் சிறப்பைக்கூறுதல். பூதங்கள் இசைபாடி ஆடிக் களிக்கும் என்று செருக்கள வஞ்சியில் கூறப்படுவன பற்றிப் பிரபந்த தீபிகை என்னும் பாட்டியல் நூல் விளக்குகிறது.

விருத்தவகை பத்தான் விளம்பும் அதனைச்

செருக்களம் எனவே செப்பினர் புலவர் —(பன்னிரு-319) என்றும்,

” செருக்களங் கூறின் செருக்கள வஞ்சி “(இலக்.பாட்.109)

போர்க்களத் திறந்த புரவி நால்வாய்

மக்கள் உடலையும் வாயசம் கழுகு

பேய்நாய் பசாசம் பிடுங்கிப்பருகிக்

களித்துப் பாடிய சிறப்பைக் காட்டல்

செருக்கள வஞ்சியாம் செப்புங் காலை (முத்துவீ. 1073)

என்பதால் அறியலாம்.

**முடிவுரை:**

அரசன் ஆண்மையோடும் ஆளுமையோடும் அனைவரையும் அரவணைப்பவன். மக்களை நல்வழிப்படுத்துபவன். வீரர்களை ஊக்கமூட்டி பரிசுகள் வழங்குபவன். புலவர்களைப் போற்றுபவன். ஆக அரசன் என்பவன் அறத்திலும் ஒழுக்கத்திலும் சிறந்து மக்களை காக்கும் மறவனாகவும் இருந்துள்ளதை இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றது. அக்காலத்தில் புழக்கத்திலிருந்த அழகிய தமிழ் சொற்களையும் அறியமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்:**

1. தொல்காப்பியம்
2. அகநானூறு
3. பதிற்றுப்பத்து
4. புறநானூறு
5. புறப்பொருள் வெண்பாமாலை
6. பொருநராற்றுப்படை

*7.* பெரும்பாணாற்றுப்படை

*8.* மதுரைக்காஞ்சி

*9.* சிலப்பதிகாரம்

*10.* ஐங்குறுநூறு

*11.* இலக்கியப்பாட்டியல்

*12.* முத்துவீரியம்

*13.* தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி 5 ,Hultzsch, E.பதிப்பாளர்: புது தில்லி: டைரக்டர் ஜெனரல், இந்திய தொல்லியல் துறை, 1991

*14.*தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி 19, Hultzsch, E.பதிப்பாளர்: புது தில்லி: டைரக்டர் ஜெனரல், இந்திய தொல்லியல் துறை, 1991

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com